முருகப்பெருமான் துணை

**மகான் பொய்கை ஆழ்வார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**01.04.2023**, சனிக்கிழமை

1. தவராஜனே ஆறுமுக அரங்கா
   தருமம் காத்திடும் ஞான தேசிகா
   அவதாரம் ஞானயுக மாற்றம்
   அமைக்கவே புரிந்த தேசிகா
2. தேசிகனே உன் பெருமை கூறி
   தெரிவிப்போம் அறுபத்துமூவரை தொடர்ந்து
   ஆசிதந்து அனுகூல ஆசிதனை
   ஆழ்வார் பெருமக்களும் தொடருவோம்
3. தொடரவே சுபகிருது சேல் திங்கள்
   தெரிவிக்க மூவாறு திகதி காரிவாரம்
   (சுபகிருது வருடம் பங்குனி மாதம் 18 ம் நாள், 01.04.2023, சனிக்கிழமை)
   இடர்வெல்ல பொய்கை ஆழ்வாரும்
   இயம்புவேன் அரங்கர்மயம் உலகம் வர
4. வருகவே அரங்கா எனும் செபம்
   வல்லமைபட தொண்டர் படைகள்
   உறுதிகொண்டு முழங்கி வர
   உலகமெல்லாம் சக்தியாகப் பரவி
5. பரவியே மக்களிடை ஞானபலம்
   பழுதின்றி குருபலமாக வந்து
   தரணியில் ஞானவான் படை
   தானாக தன்னார்வத் தொண்டாகப் பரவி
6. பரவியே மக்களிடை தெளிவும்
   பக்தி சித்தி என படிநிலை
   துறவு போல நிலைகள் தேறி
   தொண்டு வழி பெருமாற்றம்
7. மாற்றம் உலகம் காண்கும்
   மக்களெல்லாம் ஒன்றிணைய
   ஆற்றல்மிக்க உயர் மார்க்கமாக
   அரங்கன் சன்மார்க்கம் நிலைத்து

8. நிலைத்து உலகினை காக்கும்
நீதிமான்கள் ஞானவான்கள்
தலைமை வருமுலகில் உருவாகி
தனித்துவம் உலகம் காணும்

9. காணவே அன்னதானமாம்
கருணைமிக்க சேவைபெருக
ஞானமெனும் உயர் வழியில்
நம்பிக்கைபட மக்கள் தொடர்புகூடி

10. கூடியே கட்டமைப்பு பெருகி
குறைவிலா ஞானிகள் வழிகாட்ட
நாடியே சூட்சுமம் பல விளங்கி
ஞான பூமியாக ஞானவான்கள் ஆள

11. ஆளவே ஞான ஆட்சி வரும்
அரங்கன் நோக்கம் பூர்த்திபட
காலம் ஞானசித்தர் காலமாகும்
கண்டுரைத்த அனுகூல ஆசி முற்றே

—சுபம்—